**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கோவில்பட்டி**

முன்னிலை: **திரு. கி. ஆனந்த், பி.ஏ., எம்.எல்**.,

நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி

2026 வது வருடம், ஜனவரி மாதம், 08–ம் நாள் வியாழக்கிழமை

பல்வகை மனு எண்.1/2026

**குற்றவியல் பல்வகை மனு எண். 645 / 2025**

in

**குற்றவியல் பல்வகை மனு எண். 8741 / 2024**

**in**

**DVC.No.18/2019**

சின்னமுத்து .... மனுதாரர் /மனுதாரர்

// எதிராக//

மகேஷ்மேரி மற்றும் ஒருவர் ....எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்

**<u>உத்தரவு</u>**

1. இந்த மனு BNSS பிரிவு 346 ன் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் யாரும் இந்நீதிமன்றத்தில் இன்று ஆஜராகவில்லை. மனுதாரர் தரப்பில் தடை உத்தரவு கோரி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் கூடுதல் கால அவகாசம் கேட்டு வழக்கை ஒத்தி வைக்க மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் பெரிய அளவில் ஆட்சேபனை இல்லை என்பதாலும், மனுதாரர் தரப்பில் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தடை உத்தரவு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதம் வைக்கப்பட்டுள்ளதாலும், மனுதாரருக்கு வாய்ப்பு அளிக்கும் பொருட்டு இந்த வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**எனவே இந்த மனுவானது மேற்கண்டவாறு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 08ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.01.08 18:40:36 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
கோவில்பட்டி.